ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2455/ 16 - 2025 සැප්තැම්බර් මස 23 වැනි අඟහරුවාදා - 2025.09.23
2455/16 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

38 ஆம் பிரிவு (அ) வின் கீழான கட்டளை

**2025 ஆம் ஆண்டின் 99 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல.: 4-3/ 5/2018/ HA/04.
பிரதேச செயலாளர் குறிப்பு இல.: DS/VN/LA. A/MSJ232.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவு (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், இங்கு கீழ்க்காணும் அட்டவணையின் I ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தி யோகத்தரொருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த II ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் இருப்பாட்சியை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

கே. டி. லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி
மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
“மிஹிகத மெதுர”, காணிச் செயலகம்,
இல. 1200/6, இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2025, செத்தெம்பர் 11.

**அட்டவணை**

I. **காணி எடுத்தல் உத்தியோகத்தர் :** பிரதேச செயலாளர், வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளை.

II. **காணியின் விபரம் :** வட மாகாணத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வலிகாமம் வடக்கு (தெல்லிப்பளை) பிரதேச செயலாளர் பிரிவில், இல. 232, மாவிட்டபுரம் தெற்கு கிராம அலுவலர் பிரிவில், மாவிட்டபுரம் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2019.08.15 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட வரைபட இல. பி.பி.யா. 2936 இல் விபரிக்கப்பட்ட பின்வரும் காணித் துண்டின் எல்லைகள் :

**01. துண்டு இல. 1 – புலியாடி - விஸ்தீரணம்: 0.0180 ஹெக்டயார்**

வடக்கு: புலியாடி, செல்வராஜா அஜித்குமார் மற்றும் புலியாடி, மாணிக்கம் ராசரத்னம்; கிழக்கு: புலியாடி, மாணிக்கம் ராசரத்னம் மற்றும் வீதி (பிரதேச சபை); தெற்கு: வீதி (பிரதேச சபை) மற்றும் புலியாடி, பாலசிங்கம் ரமேஷ்; மேற்கு: புலியாடி, பாலசிங்கம் ரமேஷ் மற்றும் புலியாடி, செல்வராஜா அஜித்குமார்.

EOG 09 - 0220


*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை

2022 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்கக் கட்டளை

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/9/2017/IR/448-H.
பிரதேச செயலாளர் குறிப்பு இல.: අනු/10/5/4/පහළ මල්වතුඔය ජලාශය.

2022.02.21 ஆம் திகதிய 2268/9 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் சிங்கள மொழியில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வில் 2022 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க கட்டளையின் அட்டவணையில் சிங்கள மொழியில் குறிப்பிடப்பட்டுள்ள 2A பக்கத்தின் தொடர் இல. 18 இன் கீழ் உள்ள ‘‘துண்டு இல. 17 ’’ என்பதற்கு பதிலாக ‘‘துண்டு இல. 18’’ எனவும் இத்தால் திருத்தப்படுகிறது.

மேலும் 3A பக்கத்தின் துண்டு இல. 33 இல் மேற்கு எல்லையில் ‘‘அரசாங்க பற்றைக் காடு, துண்டு இல. 57 மற்றும் 37’’ என்பதற்கு பதிலாக ‘‘அரசாங்க பற்றைக் காடு, துண்டு இல. 57 மற்றும் 32’’ எனவும், 4A பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள “துண்டு இல. 45 இல் வடக்கு எல்லையில் துண்டு இல. 42 மற்றும் அரசாங்க பற்றைக் காடு’’ என்பதற்கு பதிலாக “துண்டு இல. 44 மற்றும் அரசாங்க பற்றைக் காடு’’ எனவும் இத்தால் திருத்தப்படுகிறது என்பதை அறியத்தருகிறேன்.

கே. டி. லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி
மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
“மிஹிகத மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6, இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2025, செத்தெம்பர் 02.

EOG 09 - 0221